ஈரோடு மாவட்டம் சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஈங்கூர ஊராட்சியில் விரிவான பள்ளி உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் 29.80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு வகுப்பறைகளை திறந்து வைத்தும், பெருந்துறை வட்டத்திற்குட்பட்ட திங்களூர் மயில் மஹால் திருமண மண்டபத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் விலையில்லா வீட்டுமனை பட்டாக்களை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பெருந்துறை கே.பி.சாமி, சென்னிமலை செங்கோட்டையன், சென்னிமலை ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் காயத்ரி இளங்கோ உள்ளிட்ட பலர் உள்ளனர்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணிகளின் சார்பில் நீட்தேர்விலிருந்து விலக்களிக்கக் கோரி ஐம்பது லட்சம் நபர்கள் கையெழுத்து இயக்கம் தொடக்க விழா நிகழ்ச்சி புதுக்கோட்டை மாலையீடு எஸ்.ஆர் திருமண மகாலில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில் கழக அயலக அணி தலைவர் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராச்சாமி முன்னிலையில் தெற்கு மாவட்டச் செயலாளர் தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ் ரகுபதி தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வுகளில் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, த.சந்திரசேகரன், சுப.சரவணன், செ.அசோக்பாண்டியன், வி.என்.மணி, அரு.வீரமணி, எஸ்.எஸ்.கருப்பையன், க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, எம்.லியாக்கத் அலி, கீரை தமிழ் ராஜா, ஆ.செந்தில், சு.சண்முகம், தென்னலூர் எம்.பழனியப்பன், என்.சாத்தையா, எம்.செந்தில்குமார், ஆர்.செல்லத்துரை, சி.ஆர்.வி.சித்ரா மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருவாரூர் மாவட்ட இலக்கிய அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா!

மாபெரும் பாட்டுமன்றம் - கவியரங்கம் - கருத்தரங்கம்!

மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் தலைமை!

திருவாரூர்,அக்24.

திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் கலைஞர் நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு சிறப்பு பாட்டுமன்றம், கருத்தரங்கம், கவியரங்கம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற விழாவில் சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, மாநில இளைஞர் அணி செயலாளர் ந.இளையராஜா, நகரச் செயலாளர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர் எம்.எஸ்.கார்த்திக், ஒன்றியச் செயலாளர்கள்வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், பால.ஞானவேல், நகர்மன்றத் தலைவர் திருமதி கவிதா பாண்டியன் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

திருத்துறைப்பூண்டி நகரம் ஸ்ரீ கிருஷ்ணா அரங்கில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமை ஏற்க, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் புலவர் எண்கண் மணி வரவேற்புரையாற்றினார்.

மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ந.இளையராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர் எம்.எஸ்.கார்த்திக், ஒன்றியச் செயலாளர் வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், பால.ஞானவேல், நகர்மன்றத் தலைவர் திருமதி கவிதா பாண்டியன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் செல்வஜெயதேவன், கலைவாணி மோகன் உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.

தொலைக்காட்சி புகழ் பேராசிரியர் கோ.பழனி தலைமையில் “அன்றும்... இன்றும்... என்றும்... கலைஞர்” எனும் தலைப்பில் பாட்டுமன்றத்தில் மணப்பாறை லலிதா பரமேஸ்வரி, காரைக்கால் யோகதர் ஷினி, மாஸ்டர் அன்னவாசல் டி.டி.தேவதர்ஷன் ஆகியோர் பங்கேற்றனர். கவிஞர் இள.செல்வமணி, இலக்கிய அணி மாவட்ட துணை அமைப்பாளர் நல்லாசிரியர் செல்லத்துரை ஆகியோர் பங்கேற்ற கவியரங்கமும், கவிஞர் உதயகுமார், வரம்பியம் முகமது முஸ்தாக் ஆகியோர் பங்கேற்ற கருத்தரங்கமும் நடைபெற்றது.

ஒன்றிய அவைத்தலைவர் வி.பி.எஸ்.பாலகிருஷ்ணன், நகர அவைத்தலைவர் வி.சிதம்பரம், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட அமைப்பாளர் எம்.ஐ.ஆர்.தாஜுதீன், விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் எம்.என்.ராஜா, தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர் யூனியன் மாநில துணை தலைவர் இமயம் ஜெயராமன், மாநில இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் வினோத், எம்.பி.எடிசன், வர்த்தகர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் சிக்கந்தர், விளக்குடி பாஸ்கர், ஒன்றிய நிர்வாகிகள் வழக்கறிஞர் எஸ்.பி.பாஸ்கர், கொற்கை ஜானகிராமன், சேது முருகானந்தம், வீரமணி, கவுன்சிலர்கள் சக்தி, ரவி, மாயா, ஜாகிர் உசேன், நகர இளைஞர் அணி அமைப்பாளர்கள் வசந்த், கமல், மணிவண்ணன், ஒன்றிய அமைப்பாளர் வெங்கடேஷ், பரமேஸ்வரா, வழக்கறிஞர் சி.எஸ்.சிவகுமார் உள்ளிட்டவர்களும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகளும், சார்பு அணிகளின் அமைப்பாளர்களும், கழக தோழர்களும், பெருந்திரளாக பங்கேற்கவிருக்கின்றனர்.

சேலம் வடக்கு ஒன்றியத்தில் இல்லம் தேடி இளைஞரணி உறுப்பினர் சேர்க்கும் முகாமை வடக்கு ஒன்றியச் செயலாளர் ரெயின்போ நடராஜன் முன்னிலையில் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அருண் பிரசன்னா, துணை அமைப்பாளர்கள் கார்த்திகேயன், போஸ், சிவராஜ் ஆகியோர் உள்ளனர்.